அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

விகாரி ஆண்டு ஆனி - ஆடி ஜூலை 2019 முரசு 13 ஒலி 145



பிரதி ஒன்றுக்கு ரூ.10/- ஆண்டு சந்தா ரூ. 120/-

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி




ஆழ்நிலை தியானம் மௌனம் பக்தி யோகாசனம் பிராணாயாமம் மூலிகைக் குறிப்புகள் சத்சங்கம் போன்றவை கற்றுத் தரப்படும்.

**ஆகஸ்டு 23, 24 & 25 2019**

**இடம்: வள்ளலார் சத்திய யோக சாலை,**
பெருமாள் மலை அடிவாரம்,
அர்த்தநாரிபாளையம்,
பொள்ளாச்சி.

வெள்ளி, சனி & ஞாயிறு...
மூன்று நாட்கள் முழுவதும்...

**முன்பதிவிற்கு:**

**8838540176, 8940396760, 7358904057**

## பயிற்சியில் கலந்துகொள்ளும் அன்பர்கள் கவனத்திற்கு

1. பயிற்சியில் கலந்துகொள்வோர் ஜுலை 22 - ஆம் தேதி வியாழன் இரவிற்குள் வந்துவிட வேண்டும். சிறுவர்கள் அனுமதியில்லை.
2. 17 வயதிற்கு மேல் உள்ளவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
3. டார்ச் லைட், தண்ணீர் பாட்டில், ஏர் பில்லோ எடுத்து வரவும்.
4. அன்பர்கள் 3 நாட்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களோடு படுப்பதற்கும், யோகா செய்வதற்கும் 2 பெட்ஷீட், அணிவதற்கு ஆண்கள்: டீ.ஷர்ட், ஃபுல் பேண்ட்ஸ். பெண்கள்: சுடிதார் போன்ற வசதியான ஆடைகளை எடுத்துவரவும். குறிப்பு எடுக்க நோட்டு பேனா எடுத்து வரவும்.
5. பயிற்சியில் மூன்று நாட்கள் முழுவதும் கலந்துகொள்ள வேண்டும். ஜுலை 25 ஞாயிறு மாலை 5 மணிக்கு முகாம் முடிந்துவிடும்.

**பஸ் ரூட்:** பொள்ளாச்சியிலிருந்து பஸ் எண்: 16, 27, 58 (கடைசி பஸ் இரவு 9:30க்கு)
உடுமலையிலிருந்து பஸ் எண்: 28, 34 (கடைசி பஸ் இரவு 8:30க்கு)

**உங்களுக்கு நீங்களே இந்த மூன்று நாட்கள் வாய்ப்பளியுங்கள்.**
**மூன்று நாட்களும் கலந்துகொள்வோர்க்கு மட்டுமே அனுமதி**

# தெய்வத் தீந்தமிழ் திருஅருட்பா

*அன்பு உள்ளங்களே! தங்கள் இல்லத்தில் ஒரு தீபத்தினை ஏற்றி வைத்து அதைப் பார்த்தபடி, அருட்பெருஞ்ஜோதிக் கடவுள் நம்மை காப்பார் என்ற முழு நம்பிக்கையுடன் இந்த அருட்பாக்களை ஓதவும். பின்பு ஐந்து நிமிடம் அந்த தீப ஒளியை நம்முள் நினைந்து மகாமந்திரத்தை மனத்தினால் சொல்லி தியானம் செய்யவும். இல்லந்தோறும் இன்பம் பொங்க இந்த ஜோதி வழிபாட்டினை நாள்தோறும் செய்க.*

என்னுயிர்க்கு உயிராம் தெய்வமே என்னை
எழுமையும் காத்தருள் இறைவா
என்னுளத்து இனிக்கும் தீஞ்சுவைக் கனியே
எனக்கு அறிவுணர்த்திய குருவே
என்னுடை அன்பே திருச்சிற்றம்பலத்தே
எனக்கு அருள் புரிந்த மெய்யின்பே
என்னை ஈன்றெடுத்த தந்தையே அடியேன்
இசைக்கின்றேன் கேட்க இம்மொழியே.

கானமே உழல் விலங்கினில் கடையேன்
காமமாதிகள் களைகணிற் பிடித்தேன்
மான மேலிடச் சாதியே மதமே
வாழ்க்கையே என வாரிக் கொண்டு அலைந்தேன்
ஈனமே பொருள்எனக் களித்திருந்தேன்
இரக்கம் என்பதுஓர் எட்டுணை அறியேன்
ஞான மேவுதற்கு என்செயக் கடவேன்
நாயகா எனை நயந்து கொண்டருளே.

திருக்கதவம் திறவாயோ திரைகளெலாம் தவிர்த்தே
திருவருளாம் பெருஞ்ஜோதி திருவுருக் காட்டாயோ
உருக்கி அமுது ஊற்றெடுத்துஎன் உடம்பு உயிரோடு உளமும்
ஒளிமயமே ஆக்குற மெய்உணர்ச்சி அருளாயோ
கருக்கருதாத் தனிவடிவோய் நின்னை என்னுட் கலந்தே
கங்குல் பகல் இன்றி என்றும் களித்திடச் செய்யாயோ
செருக்கருதாதவர்க்கு அருளும் சித்திபுரத்து அரசே
சித்தசிகாமணியே என் திருநடநாயகனே.

உறவே எனது இன்னுயிரே எனதுள்ளத்து உற்றினிக்கும்
நறவே அருட்பெருஞ்ஜோதி மன்றோங்கு நடத்தரசே
இறவேன் எனத்துணிவெய்திடச் செய்தனை என்னை இனி
மறவேல் அடிச்சிறியேன் ஒருபோது மறக்கினுமே.

திருச்சிற்றம்பலம்

# ஞானோபதேசம்

## உள்ளும் புறமும்

அன்பு உள்ளங்களே! ஒரு கதையோடு இக்கட்டுரைக்குள் செல்லலாம். இக்கதையில் நீங்கள்தான் முக்கிய கதாப்பாத்திரம்.

ஒருநாள் ஓர் விமானியுடன் ஒற்றைப் பயணியாக விமானத்தில் பயணம் செய்துகொண்டு இருக்கிறீர்கள். திடீரென்று விமானத்தின் இஞ்சின் பழுதடைந்துவிடவே, விமானம் ஆகாயத்தில் தடுமாறுகிறது. எந்த நேரத்திலும் விமானம் விபத்துக்குள்ளாகும் நிலைமை வருகிறது. அப்போது விமானி உங்களிடம் பாராஷூட் ஒன்றை கொடுத்து தப்பி விடுமாறு உதவுகிறார்.

நீங்களும் அதை எடுத்துக் கொண்டு வானிலிருந்து குதித்து விடுகிறீர்கள். ஆனால் சோதனையாக அந்த பாராஷூட் உங்களை ஒரு அடர்த்தியான காட்டிற்குள் எடுத்துச் சென்று இறக்கிவிடுகிறது.

காட்டின் எல்லாப் புறமும் ஒரே மாதிரி இருக்கின்றது. எந்தப் புறம் ஓடினால் தப்பிக்க முடியும் என்று உங்களுக்குத் தெரியவில்லை. சில நொடிகள் சுற்றிமுற்றி பார்க்கிறீர்கள். அப்போது ஒரு பலகையில்,

1) மனிதர்கள் எவரேனும் தவறுதலாக காட்டிற்குள் நுழைந்து விட்டால் சரியாக ஒருமணி நேரத்தில் காட்டின் மிகக் கொடிய விலங்குகள் அவர்கள் இருக்கும் இடத்திற்கு மோப்பம் பிடித்து வந்துசேரும். எனவே, ஒருமணி நேரத்திற்குள் அந்த காட்டை விட்டு நீங்கள் தப்பித்தாக வேண்டும்.

2) கிழக்கு பக்கமாக சென்றால் மட்டும்தான் அந்தக் காட்டை விட்டு வெளியே செல்ல முடியும்.

என காட்டின் இரு விதிகள் எழுதப்பட்டிருப்பதை பார்க்கிறீர்கள். மீண்டும் ஒருமுறை சுற்றிலும் பார்க்கிறீர்கள். கிழக்கு திசை எதுவென்றே தெரியவில்லை. என்ன செய்வது என்று ஒரு யோசனையும் வரவில்லை. காட்டு விலங்குகளின் பசிக்கு இரையாகிவிடுவோமோ என்ற அச்சம் வேறு ஒரு பக்கம்.

அப்போது அந்த இடத்தில் திடீரென்று ஒரு தேவதை உங்கள் முன் தோன்றி, உங்களின் சூழ்நிலையைப் புரிந்துகொண்டு, உங்களிடம் இரு பொருள்களை நீட்டுகின்றது.

ஒன்று மணி பார்க்கும் கடிகாரம். அதன் மூலம் உங்களுக்கு இன்னும் எவ்வளவு நேரம் தப்பிக்க இருக்கிறது என்பதைக் கணக்கிட்டுக் கொள்ளலாம். ஆனால், அதை வைத்துக் கொண்டு திசையை கண்டுபிடிக்க இயலாது.

*மற்றொன்று திசை காட்டும் கருவி. இந்தக் கருவி மூலம் உங்களுக்குத் தப்பிச் செல்லக்கூடிய திசை தெரியும். ஆனால், இந்த இரு பொருட்களில் ஏதேனும் ஒன்றை மட்டும்தான் நீங்கள் எடுத்துக் கொள்ள முடியும். இத்தகைய சூழ்நிலையில் நீங்கள் எந்தப் பொருளைத் தேர்வு செய்வீர்கள்? எது உங்களுக்கு மிக முக்கியமானதாகத் தோன்றும்? திசையா, நேரமா? வழியா, வேகமா?*

**ஆம், உங்களின் யூகமும் பதிலும் சரிதான். திசைக்காட்டும் கருவிதான் உங்களுக்கு அதிக தேவையாக இருக்கும்.** *இந்தக் கதைக்கு மட்டுமல்ல. நம் வாழ்க்கைக்கும் இதே நிலைதான். பல பிரச்சனைகள் நமக்கு வரும்போது சரியான திசையில் செல்லக்கூடிய முடிவே பெரிய வெற்றியைப் பெற்றுத் தருகிறது.*

*ஒருவர் எவ்வளவுதான் திறமைகள் கொண்டவராய் இருப்பினும், வேகமாக செயல்படக்கூடியவராய் இருப்பினும், சரியான வழியில் செல்லத் தெரியவில்லையென்றால் அவர் இலக்கை அடைவது இயலாத காரியமே.*

வெற்றிக்கு வேகமாக ஓடுவதைக் காட்டிலும், சரியான திசையில் ஓடுவது என்பது முக்கியம்.

*ஒருமுறை திருவண்ணாமலையில் உள்ள நமது சன்மார்க்க சங்கத்திற்கு புதிதாக வர நினைத்த ஒரு அன்பர் திருவண்ணாமலை பேருந்து நிறுத்தத்திற்கு வந்துவிட்டு நமது சன்மார்க்க சங்கம் எங்கு இருக்கிறது என அலைபேசியில் தொடர்பு கொண்டுக் கேட்டார்.*

*“கிரிவலப்பாதையில் வாயுலிங்கத்திற்கு எதிரில் உள்ளது” என பதிலளித்தோம்.*

*அதற்கு அவர் அண்ணாமலையார் கோவிலிலிருந்து எவ்வளவு தூரம் எனக் கேட்டார்.*

*“ஐயா, நீங்கள் பேருந்து நிலையத்திலிருந்து கிரிவலமாக வந்தால் ஆறாவது லிங்கம் வாயுலிங்கம். அதற்கு நீங்கள் பத்து கிலோ மீட்டர் தூரம் கடக்க வேண்டும். ஆனால், பேருந்து நிலையத்திலிருந்து எதிர்திசையில் கிரிவலம் வந்தால் மூன்றாவது லிங்கம் வாயுலிங்கம். இது வெறும் நான்கு கிலோமீட்டர்தான்” என்றோம். ஆம் அன்பர்களே! ஆன்மீகமும் அப்படித்தான். திசை புரிந்துவிட்டால் அங்குலத் தொலைவுகூட இல்லை ஆன்மீக அனுபவம்.*

*நம் வள்ளல் பெருமானார் திருஅருட்பா வசனபாகத்தில் அருளியதாவது, “கடவுள் ஆன்ம வியாபகமாகிய மனித தேகத்தில் காரியப்படுவது உத்தமமாக இருக்க சிலா, விக்கிர, பூத, தாரு முதலியவைகளில்*

*வெளிப்படுத்திக் கொள்வது மந்த நியாயம். அதில் தோன்றி அனுக்கிரகிப்பதாகச் சொல்வது ஜாலம்" என்கிறார்.*

*கடவுள் என்பது பெயர்ச்சொல் அல்ல. அது வினைச் சொல். கட்டளைச் சொல். இதைப் பிரித்துப் பார்த்தால் விளங்கும்.*

*கட+உள் = கடவுள். "கடந்து உள்ளே செல்" என்ற கட்டளை வாக்கியத்தின் சுருங்கிய வடிவமே "கடவுள்". இதை உணராது ஆன்மீகத்தின் முதல் படியில்கூட நாம் அடியெடுத்து வைக்க முடியாது. சித்தர் சிவவாக்கியர்,*

தூரதூர தூரமென்று சொல்லுவார்கள் சோம்பர்கள்
பாரும் விண்ணும் எங்குமாய் பரந்த அப்பராபரம்
ஊரும் நாடும் காடும் ஓடி உழன்று தேடும் ஊமைகாள்
நேரதாக உம்முளே அறிந்துணர்ந்து நில்லுமே.

*எனப் பாடுகின்றார். அதாவது, கடவுளை புறமுகமாகத் தேடுவதை நிறுத்தி விரைந்து அதற்கு எதிர் திசையில் அகமுகமாக நம் உள்ளே தேட வேண்டும் என்பதே இதன் பொருள். இவ்விதம் உணராதோரை நம் வள்ளல் பெருமானார் திருஅருட்பாவில் "பற்றறுத்தல்" எனும் தலைப்பில்*

தெய்வங்கள் பலபல சிந்தை செய்வாரும்
  சேர்கதி பலபல செப்புகின்றாரும்
பொய்வந்த கலைபல புகன்றிடுவாரும்
  பொய்ச்சமயாதியை மெச்சுகின்றாரும்
மெய்வந்த திருவருள் விளக்கம் ஒன்றில்லார்
  மேல்விளைவு அறிகிலர் வீண் கழிக்கின்றார்

*எனப் பாடியுள்ளார். அதாவது, தெய்வத்தின் தன்மை என்னவென்று தெரிந்து கொள்ளாமலும், அதை அடையும் வழியைத் தெரிந்து கொள்ளாமலும் வீண்பொழுது கழிக்கின்றனர் என்கின்றார்.*

**உடம்பெடுத்த பயனாவதெல்லாம் உடம்பினுள் உத்தமனைக் காண்** *எனும் ஔவை வாக்கும்* **உடம்பினுள் உத்தமன் கோயில் கொண்டான்** *என்ற திருமூலர் வாக்கும் இங்கு கருதற்குரியது.*

*எனவே, பரம்பொருளை நம்முள் தேடவேண்டும் என்பது இதனின்று தெளிவாகிறது. கடந்து அறியும் பொருளே கடவுள் என முன் கூறினோமல்லவா, அதில் எதைக் கடக்க வேண்டும் என்பதை இனி காண்போம்.*

அளவையெலாம் கடந்து மனம் கடந்து மற்றை
அறிவையெலாம் கடந்துகடந்து அமல யோகர்
உளவையெலாம் கடந்து பதம் கடந்து மேலை
ஒன்றும் கடந்து இரண்டும் கடந்து உணரச் சூழ்ந்த
களவையெலாம் கடந்து அண்ட பிண்டமெல்லாம்
கடந்து நிறைவான சுகக் கடலே அன்பர்
வளவையெலாம் இருளகற்றும் ஒளியே மோன
வாழ்வே என் உயிர்க்குயிராய் வதியும் தேவே

*அஃதாவது, உலகில் வாழும் மக்களின் அறிவு எதையும் அறியும்பொருட்டு கைக்கொள்ளும் அளவைகளையும், ஆராயும் மன எல்லைகளையும், அவற்றால் பெறப்படும் அறிவின் எல்லைகளையும், மலமறைப்பின் நீங்கிய யோகியர் மேற்கொள்ளும் நுண்ணிய நெறிகளையும், அவர்க்குரிய பதங்களையும் கடக்க வேண்டும்.*

*மேலும், ஒன்றாகிய மாய மண்டலத்தையும், சிவம் சக்தி என்ற இருவகை நிலைகளையும் கடக்க வேண்டும். சிவஞானம் பெற நினைக்கும் வேறு சூழ்ச்சிகளையும், அண்டமும் பிண்டமுமாகிய பொருள்களையும் கடந்தால் எங்கும் நீக்கமற நிறையும் நிறைவாய், சுகம் நல்கும் கடலாக விளங்கும் பரம்பொருளைக் காணலாம்.*

*இதையே எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையில் அருட்பெருஞ்ஜோதி அகவலிலும் பின்வருமாறு அருளியுள்ளார்.*

தனுகரணாதிகள் தாம்கடந்து அறியும்ஓர்
அனுபவமாகிய அருட்பெருஞ்ஜோதி

*தனு (உடல்), கரணம் (மனம், புத்தி, சித்தம், அகங்காரம்), புவனம் (உலகம்), போகம் இவை எல்லாவற்றையும் கடந்து அறிந்து அனுபவிக்கக்கூடிய ஓர் அனுபவப்பொருளே கடவுள் என்பதே இதன் பொருள். இதையே திருமூலரும்,*

தேனுக்குள் இன்பம் கறுப்போ சிவப்போ
வானுக்குள் ஈசனைத் தேடும் மதியிலீர்
தேனுக்குள் இன்பம் செறிந்திருந்தார்போல்
ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந்தானே.

*என்று அருளியுள்ளார். எவ்வாறு தேனை உண்ணும்போது உண்டாகும் இன்பத்திற்கு கருப்பு சிவப்பு என்று உருவம் கொடுக்க முடியாதோ அதுபோல், பேரின்ப மயமான இறைவனுக்கும் உருவம் கொடுக்க முடியாது. அவ்விதம் அருவமாக இருக்கும் இறைவனை புறத்தே தேடுவது அறியாமை என்கிறார்.*

*தேனுக்குள் சுவையும், இன்பமும் இருப்பதுபோல் நம் உடம்பிற்குள் இறைவன் ஒளிந்திருக்கிறான் என்கிறார் திருமூலர்.*

*இது ஒருபுறமிருக்கட்டும். இப்போது பின்வரும் திருவருட்பாவை ஆய்வு செய்வோம்.*

சோற்றானைச் சோற்றிலுறும் சுகத்தினானை
துளக்கமிலாப் பாரானை நீரானைக்
காற்றானை வெளியானைக் கனலானைக்
கருணைநெடுங் கடலானைக் களங்கர் காணத்
தோற்றானை நான்காணத் தோற்றி னானைச்
சொல்லறியேன் சொல்லிய புன்சொல்லை எல்லாம்
ஏற்றானை என்உள்ளத்தில் எய்தினானை
எம்மானைக் கண்டு களித்திருக்கிறேனே.

*“உண்கின்ற சோறாகவும் அதனை உண்டபோது அனுபவிக்கும் சுகத்தின் வடிவாகவும் இருப்பவனை; அசைவில்லா பூதமான நிலமாகவும், நீராகவும், நெருப்பாகவும், காற்றாகவும், ஆகாய வெளியாகவும் இருப்பவனை; அருளால் கடல் போன்றவனை; நெஞ்சில் வஞ்சம் உடையவர்களால் காணுதற்கு இயலாதவனை; அடியேன் காணத் தோன்றியவனை; சொல்லும் வகையறியாதவனான யான் கூறிய அற்பமான சொற்களையெல்லாம் ஏற்று அருள்பவனை; என் உள்ளத்தில் அடைபவனை; எம் இறைவனை கண்ணாரக் கண்டு மகிழ்ந்திருக்கின்றேன்” என்கிறார் நம் வள்ளல் பெருந்தகை.*

*இறைவன் சர்வவியாபி - எங்கும் நீக்கமற நிறைந்தவன் என்பதால், உடற்கு சக்தியளிக்கும் உணவாகவும், அதை உண்ணும்போது உண்டாகும் சுகமாகவும், பஞ்சபூதங்களாகவும் இருப்பதாகக் கூறுகின்றார். ஆனால்,* **அத்தகைய பரம்பொருளை பெருமான் கண்டு அனுபவித்தது அவர்தம் உள்ளத்தில்தான்.** *இதை வேறொரு பாவிலும் தெளிவாக அருளியுள்ளார்.*

**அருட்ஜோதி தெய்வம்** *எனத் தொடங்கும் பரசிவநிலை எனும் தலைப்பின்கீழ் வரும் பாவில்* **அம்பலத்தில் ஆடுகின்ற ஆனந்த தெய்வம், சிற்சபையில் விளங்குகின்ற தெய்வம் அதே தெய்வம்** *என்ற இரு வரிகள் கருத்தில் கொள்ளத்தக்கது.*

**அம்பலம்** *என்றால்* **ஆகாயம். சிற்சபை** *என்பது* **ஆன்மா.** *வானளாவி எங்கும் நீக்கமற நின்று நடம் புரியும் பேராற்றல் கொண்ட அதே இறைவன்தான் சிற்சபையாகிய ஆன்மாவையும் தன் இருப்பிடமாக; கோயிலாகக் கொண்டு வாழ்வதாக கூறுகிறார்.*

அதாவது, தன்னுள் மட்டுமல்லாமல் எதிரிட்ட எல்லா அசையும் அசையா பொருட்களாகவும் அவர் இருக்கிறார் என்பதே உண்மை.

இதனால், எறும்பு முதல் யானை வரையுள்ள எல்லா உயிர்களின் ஆன்மாவே சபையாகவும் அதன் உள்ஒளியே பதியாகவும் கண்டு வழிபடுவதே உண்மையான கடவுள் வழிபாடு என்பது பெருமானார் வகுத்தருளிய சுத்த சன்மார்க்கத்தின் கொள்கை. இதை ஓர் சிறு கதையின் மூலம் காண்போம்.

ஒரு இளைஞன், தன் பெற்றோரை நீங்கி, குருவைத் தேடிப் புறப்பட்டான். வழியில் ஒரு ஜென் குருவைச் சந்தித்தான். ஆன்மீகத்தில் சிறக்க விரும்புவதாக அவரிடம் தெரிவித்தான்.

அதற்கு அந்த ஜென் குரு, "வேறு யாரோ ஒரு குருவைத் தேடிப் போவதைவிட புத்தரையே நீ சந்திக்கலாமே?" என்றார்.

"புத்தரா! அவரை எங்கே காண முடியும்?" என்று பரபரத்தான் அந்த இளைஞன்.

"நீ வீட்டுக்குத் திரும்பும்போது, தோளில் போர்வை போர்த்தி, காலணிகளை மாற்றிப் போட்டுக்கொண்டு ஒரு நபர் உன்னை எதிர்கொள்வார். அவரே புத்தர்" என்றார் குரு. அவனும் அவசரமாக வீடு திரும்பினான்.

தன் மகனை வரவேற்கும் பரபரப்பில், அவன் தாய் காலணிகளை மாற்றிப் போட்டுக்கொண்டபடி, தோளில் போர்த்திய போர்வையுடன் அவனை எதிர் கொண்டாள். தன் தாயைப் பார்த்த கணத்தில் அந்த இளைஞன் ஞானம் பெற்றான்!

இதனையே நம் பெருமானார், "எல்லா உயிர்களிடத்தும் கடவுள் வியாபித்திருப்பதை அறிதலே ஈஸ்வர பக்தி" என்பார். மேலும், "எல்லா உயிரையும் தன் உயிர்போல் பார்க்கும் உணர்வை வருவித்துக் கொள்ளுதல் வேண்டும். இதுவே சாதனம்" என்றும் உபதேசித்து அருளியுள்ளார்.

முடிவாக நாம் அறிந்துகொள்ள வேண்டியது என்னவெனில், இறைவனை நமக்குள் உயிர்க்குயிராய், அறிவுக்கு அறிவாய் விளங்குவதாகக் கருத்தில் கருதி தினமும் தியானிக்க வேண்டும். பின்பு கண்களைத் திறந்து வெளியே வரும்போது எதிரிட்ட எல்லா ஜீவதேகங்களையும் இறைவன் வாழும் ஆலயமாகக் கருதி அவற்றிற்கு இடைக்கிடை ஏற்படும் துன்பங்களை நீக்குவிப்பதையே கடவுள் வழிபாடாகச் செய்து கடவுள் அருளைப் பரிபூரணமாகப் பெற்று ஆன்மலாபமடைந்து எல்லையில்லா இன்பத்தை அடையவேண்டும் என்பதாம்.

# மூத்தோர் சொல் அமிர்தம்

ஒரு ஊரில் ஒரு பணக்காரன் இருந்தான். பணத்தினால் பெறக்கூடிய எல்லா சுகசவுகரியங்களும் அவனுக்கு இருந்தும் மகிழ்ச்சியின்றி இருந்தான். நிம்மதியையும் சந்தோஷத்தையும் தேடி, ஒரு ஞானியிடம் வந்தான். அவரிடம் தன் குறையைச் சொன்னான். "ஏராளமான செல்வம் படைத்த நீங்கள் எதை வேண்டுமானாலும் வாங்கலாம், எங்கு வேண்டுமானாலும் போகலாம். அப்படியிருக்க என்ன பிரச்சனை?" என்று ஞானி கேட்க, "எனக்கு உடனடியாக மகிழ்ச்சி தேவை. அதை வாங்க முடியுமா?" என்றான் செல்வந்தன்.

ஞானி அவனை கால்பந்து விளையாட்டு பார்க்க அழைத்துச் சென்றார். மைதானத்தை அடைந்து பந்தயத்தைக் கவனிக்க ஆரம்பித்தனர். இரு அணிகளும் உற்சாகமாக ஆடிக்கொண்டிருந்தனர்.

ஞானி, "எவ்வளவு நன்றாக விளையாடுகிறார்கள் ஒருவருக்கொருவர் சளைக்காமல் வெற்றி ஒன்றையே லட்சியமாகக் கொண்டு விளையாடுவதைப் பார்க்க ஆனந்தமாக இருக்கிறது" என்றார்.

ஆனால் பணக்காரன் கண்களிலோ பந்து உதைபட்டு இங்கும் அங்கும் அலைக்கழிக்கப்படுவதுதான் தெரிந்தது. அவன் ஞானியிடம் "இந்தப் பந்தைப் போன்றதுதான் என் நிலையும். வருமான வரிக்காரரர்கள், தொழிலாளிகள், பிள்ளைகள் என்று நாலா பக்கமும் இடிதான்!" என்று சொன்னான்.

சரி, இது வேண்டாம் வேறு இடத்துக்குப் போகலாம் என்று ஞானி ஒரு சங்கீத கச்சேரிக்கு அவனை அழைத்துபோனார். அங்கு ஒரு புல்லாங்குழல் வித்துவான் ஆனந்தமாக இசை மழை பொழிந்து கொண்டிருந்தார். அவர்கள் அமைதியாக இசையை ரசித்து மகிழ்ந்தனர். திரும்பும் வழியில் ஞானி செல்வந்தனைப் பார்த்து, "பந்துக்கும் குழலுக்கும் என்ன வேற்றுமை?" எனக் கேட்டார்.

"இதென்ன கேள்வி? ஒன்று இசைக்கருவி, மற்றொன்று விளையாட்டுச் சாதனம்!" என்றான் தனவான்.

ஞானி சிரித்துவிட்டு, "இவை இரண்டுக்கும் தேவைப்படுவது காற்று. ஆனால், பந்து தான் வாங்கிய காற்றைத் தனக்குள்ளேயே வைத்துக் கொள்கிறது. அதனால்தான் அது உதைபடுகிறது. புல்லாங்குழல், உள்வாங்கிய காற்றை தகுந்த இடத்தில், தக்க அளவில் வெளியே விட்டுவிடுகிறது. அதனால், அற்புதமான இசை உருவாகிறது. இதுபோல் சிலர், கால்பந்தினைப்போல் பணத்தைத் தன்னிடமே வைத்துக் கொள்கின்றனர்.

இதனால், அவர்கள் உதைபட்டு அங்குமிங்கும் ஓடி நிம்மதியற்ற வாழ்வை வாழ்கின்றனர். மாறாக அவர்கள், தான்பெற்ற செல்வத்தைப் பாத்திரமறிந்து, தேவையறிந்து தகுந்த அளவில் தருமம் செய்தால் உண்மையான மகிழ்ச்சி, நிம்மதி கிடைக்கும். இப்போது புரிகிறதா'' என்றதும் தெளிவடைந்தான் செல்வந்தன்.

**அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்**
**அற்குப ஆங்கே செயல்**

செல்வம் நிலைக்காத இயல்பை உடையது. அத்தகைய செல்வத்தைப் பெற்றால், பெற்ற அப்போதே நிலையான அறங்களைச் செய்ய வேண்டும்.

---

மருமகள் சாரதா சமையலறையில், ஏதோ முணுமுணுத்துக் கொண்டே, சமைத்துக் கொண்டிருந்தாள். பெரியவருக்கு நியூஸ்பேப்பரிலும் கவனம் செலுத்த முடியவில்லை, டி.வி. காட்சிகளிலும் மனம் ஒன்றவில்லை!

மருமகள் என்ன முணுமுணுக்கிறாள், அவளுக்கு என்ன குறை, அதை தன்னால் முடிந்தால் தீர்த்துவைக்கலாமே என்னும் ஆதங்கம்!

“சாரதா! ஸ்டவ் சரியா எரியாம தகராறு பண்ணுதா? நான் வேணுன்னா, கேஸ் மெக்கானிக்கை வரச்சொல்லட்டுமா?” என்றார் அந்தப் பெரியவர்.

அவருக்கு தெரியும், மருமகளின் முணுமுணுப்புக்கு அது காரணமில்லை என்று. இருந்தாலும், இது ஒருவகைத் தந்திரம்! நினைத்தது போலவே அவர் யுக்தி உடனடியாக வேலை செய்தது.

மருமகள் உடனே சமையலறையிருந்து வெளியே வந்தாள். “அதில்லேப்பா! இந்த வேலைக்காரியை நூறு தடவை ‘சீக்கிரம் வா, லேட் பண்ணாதே’ன்னு சொன்னாலும், காதிலேயே போட்டுக்க மாட்டேங்கறா, எனக்கு சமையலுக்கு பாத்திரம் இல்லாம திண்டாட வேண்டியிருக்கு. இவளை நிறுத்தித் தொலைச்சிடலாமான்னு ஆத்திரமா வருது. ஆனா, வேற வேலைக்காரி யாரும் கிடைக்க மாட்டேங்கறா'' என்றவளைப் பார்த்து பெரியவர், “சொல்றேனேன்னு கோவிச்சுக்காதே தினமும் இதையே புலம்பிக்கொண்டே இருப்பதை நிறுத்திட்டு, மாற்றுவழி ஏதாவது இருக்கான்னு யோசிச்சியா?'' என்றார்.

“இருக்கிற வேலையிலே, எனக்கேதுப்பா நேரம்?” என்றாள் மருமகள் சலிப்புடன்.

“சாரதா! உன்னோட பிரச்சனை, வேலைக்காரி லேட்டா வர்ரது இல்லே, சமையலுக்கு பாத்திரங்கள் குறைவாயிருக்கு, திருப்பித்

*திருப்பி ஒரே செட் பாத்திரங்களை சுத்தம் செய்து உபயோகப்படுத்த வேண்டியிருக்கு, இதுதான் பிரச்சனை. நம்ம வீட்டு பரணிலே உங்க மாமியார் உபயோகப்படுத்தின பாத்திரங்கள் நிறைய இருக்கு! நான் எடுத்து தரேன், உபயோகப்படுத்திக்கோ. உபயோகத்துக்கு இல்லாம, பரணிலே தூங்கறதுக்கா பாத்திரங்கள் வாங்கறோம்?" என்றவரைப் பார்த்து, "ஆமாம்ப்பா! இது எனக்கு தோணாமல் போச்சே!" என்றாள்.*

*"தோணாமல் போனதுக்கு காரணம், நீ சம்பளம் கொடுக்கிற வேலைக்காரி, நீ சொல்றதை கேட்கமாட்டேங்கறாளேங்கிற கோபம் உன் அறிவுக் கண்களை மறைக்குது. கோபம் நம்முடைய முதல் எதிரி எது நடந்தாலும் 'நான்' என்கிற எண்ணம் உடனே தலைதூக்கும், அதனுடன்கூட ஆத்திரம், கோபம், ஏமாற்றம், வெறுப்பு எல்லாம் சரக்கு ரயில் மாதிரி வரும், அறிவை மழுங்கச் செய்யும்'' என்று பெரியவர் கூறியதும், "ஒத்துக்கிறேன்ப்பா! அதுக்கு தீர்வு என்னப்பா?" என்று ஆர்வத்துடன் கேட்டாள்.*

*"ரொம்ப சிம்பிள். எந்த எண்ணம் தலை தூக்கினாலும், உடனே அதை கவனிச்சு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கணும்னு அவசரப்படாம, அந்த எண்ணத்தை ஊறப்போடு, ஆறப்போடு அதனுடைய வேகம் கொஞ்சம் கொஞ்சமா குறையும், தெளிவு வரும், அப்ப நிதானமா யோசித்தால், தீர்வு நிச்சயமா கிடைக்கும். முயற்சி பண்ணிப்பார்!" என்றார்.*

சினம் என்பது உள்வேக்காடு. புடஞாயம்போல். இது தேகத்தை சீக்கிரம் நஷ்டம் பண்ணும். வெகுளி என்பது மீசை துடித்தல், கண்சிவத்தல், கை முதலிய உறுப்புகள் துடித்தல், வாய் குழறி மேல்விழுந்து கூவுதல். இஃது ஆயுளை நஷ்டம் பண்ணும். ஆகையால், எவ்வகையிலும் கோபத்தின் பூர்வோத்தரமாகிய சினம், வெகுளி என்னும் கூற்றை (எமனை) ஒழித்தல் அவசியம். இதுபோல் மற்றக் கெடுதியாகிய காமக் குரோதாதி சம்பந்தங்களையும் நீக்கல் வேண்டும்.

திருச்சிற்றம்பலம்

Owned, Published & Edited by S. Mahendrababu
from Vallalar Sathya Dharmasalai, Mountain Roundway,
Thiruvannamalai Tk. & Dt. - 606 603.
and Printed by J. Radha at Subam Printers
39/1, Kosamada Street, Tiruvannamalai - 606 601.

**Advertisement**

## மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

வடலூர் சித்தி வளாகம் என்கின்ற மேட்டு குப்பத்தில் நடைபெறும் பசி பிணி போக்கும் திரு பணிக்கு உதவ அணுகுவீர்.

திரு. நந்தி சரவணன் ஐயா
9842679999 / 9442327059

BNS

# eXS Lending Library

## எக்சஸ் வாடகை நூலகம்

**Books for All Ages**

Wings of Wisdom

| Unlimited Books Starts @ INR 1200/. | |
|---|---|
| Scheme | Books at a Time |
| Super Reader | 10 |
| Book Lover | 5 |
| Elite Reader | 4 |
| Language Reader | 3 |
| Smart Reader | 1 |
| Door Delivery Available* | |

**HABITUAL READER**

# Pay as you take and read, like 10% to 15% on book cost of 15 days.

# % may change based on books popularity, availablity and price

# SOULFUL HOME

**Schemes starts @ INR 2400/=**

| Sno | Facilities | Super | Max | Book Max | Mag Max |
|---|---|---|---|---|---|
| 1 | Books | 30 | 15 | 7 | 2 |
| 2 | Magazines | 15 | 10 | 5 | 5 |
| 3 | Scheduled Visits | 12 | 12 | 12 | 24 |
| 4 | Unscheduled Visits | 6 | 6 | 3 | 0 |

Deposit INR - 500/



**Key advantages**

1. Lifetime membership @ 100% refundable deposit INR 500/=
2. Reading charges starts @10%
3. Hassle free door step service available

AYYAPPAN THANGAL 26792007 | VALASARAVAKKAM 42105700 | PORUR 42107304 | OMR 42863478 | VADAPALANI 42642491



தலை குனிந்து என்னை பார் .....
தலை நிமிர்ந்து
உன்னை நடக்க வைக்கின்றேன் – புத்தகம்

9444 408 804

## அருள் அற்புதம் அடிமுடி காட்டப்பெற்றதும் சூட்டப்பெற்றதும்

திருவள்ளுவர், திருமூலர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள், மாணிக்கவாசகர், பட்டினத்தார், தாயுமானவர் என வாழையடி வாழையாக வந்த திருக்கூட்ட மரபில் சென்ற நூற்றாண்டில் சன்மார்க்கமும் தமிழும் தழைத்து இனிதோங்க நந்தமிழகத்தே வந்துதித்த செந்தமிழ்ஞானி திருவருட்பிரகாச வள்ளல் பெருமானாருக்கு அருட்பெருஞ்ஜோதி இறைவன் அடிமுடி காட்டிய சிறப்பையும், சூட்டிய சிறப்பையுமே இங்கு காணவிருக்கிறோம்.

அவனினும் அவன் தாள் சிறந்ததென்பது பெரியோர் கொள்கை. பரிபாடலில் கடுவன் இளவெயினனார் 'நின்னில் சிறந்த நின்தாள் இணையவை' எனப் பாடுகின்றார். திருக்குறளின் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்துக் கூறும் ஆசிரியர் திருவள்ளுவனார் ஏழு குறட்பாக்களில் **நற்றாள், மாண் அடி, தாள்** எனத் திருவடியைக் குறித்துக் கூறுகின்றார்.

திருவாசகத்தில் முதலாவதாகிய சிவபுராணத்தில் நாதன் தாள், இறைவன் அடி, பெய்கழல்கள், பூங்கழல்கள், கோன்கழல்கள், சீரோன்கழல், சேவடி என மணிவாசகரும் திருவடி குறித்து அருளிச்செய்துள்ளார்.

திருமூலதேவரும் திருவடியே சிவம். திருவடியே சிவஞானம். திருவடியே சிவானுபூதி என பின்வரும் திருமந்திரத்தில் அருளுகின்றார்.

திருவடியே சிவமாவது தேரில்
திருவடியே சிவலோகம் சிந்திக்கில்
திருவடியே செல்கதியது செப்பில்
திருவடியே தஞ்சம் உள்தெளிவார்க்கே

திருவடி ஞானம் சிவமாக்குவிக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமல மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே

ஆனால், திருவடி என்பது என்ன? அது எங்கே இருக்கிறது? அதை எவ்விதம் அடைவது? இக்கேள்விகளுக்கு நமது மகான்கள் மிகத் தெளிவாக விளக்கம் அளிக்கிறார்கள். இதை சற்று ஆழமாக எண்ணிப்பார்க்க வேண்டும்.

*சிவானுபூதியைத் திருவடி என்பது சைவ மரபு. திருவருளையே திருவடி என்பர். 'மலவாசனை நீங்கினால் அன்றி முதல்வனது திருவடியாகிய சிவானந்தத்தை அனுபவித்தல் கூடாது' என்பது சிவஞான மாபாடிய உரை. 'யான் எனது அற உயிரில் பரை நின்றது அடியாம்' என்பது உண்மைநெறி விளக்கம். 'என்னது யான் அற்றால் இறைவனடி தானாகும்' என்பது அநுபோக வெண்பா. 'யான் எனதென்றற்ற இடமே திருவடியாம்' என்பது கந்தர் கலிவெண்பா. ஆக, யான் எனது அற்ற இடமே இறைவன் திருவடி என்பது தெளிவு.*

*யான் எனது என்னும் இருவகைப் பற்றும் அற்றுத் திருவடியாகிய சிவானந்த அநுபூதியை அனுபவிப்போரே அடியார் என்னும் திருப்பெயர்க்கு உரியவராவர். அவ்வனுபூதியைப் பெற முயலும் உண்மையாளர்க்கும் உபசாரத்தால் அடியார் என்னும் பெயர் உரித்தாயிற்று. 'அடியார் அரனடி ஆனந்தம் கண்டோர்' எனத் திருமூலர் அருளுவர்.*

அடியார் அரனடி ஆனந்தம் கண்டோர்
அடியார் ஆனவர் அத்தருள் உற்றோர்
அடியார் பவரே அடியவர் ஆமால்
அடியார் பொன்னம்பலத்து ஆடல் கண்டாரே

*என்னும் திருமந்திரம் அடியார் இலக்கணம் உணர்த்திற்று. இறைவனது திருவடி போன்றே அவன் அடியார்களது திருவடிகளும் சிறந்தன.*

*இத்தகைய திருவடியை இறைவன் வள்ளல் பெருமானாருக்கு காட்டி அவர் சிரமேல் சூட்டிய திறத்தை இனி காண்போம்.*

*தீக்கைகளில் சிறந்தது திருவடி தீக்கை. அப்பரும், சுந்தரரும், மாணிக்கவாசகரும் பெற்றது போன்றே வள்ளல் பெருமானாரும் இறைவனால் திருவடி தீக்கை செய்யப்பெற்றார். திருவடி தீக்கையாவது அடிமுடி சூட்டுதலாம். அதனைக் காணும் முன்னர் அடிமுடி காட்டுதலைக் காண்போம்.*

*திருமாலும் பிரமனும் இறைவனது அடிமுடிகளைக் காண முயன்றும் கண்டாரிலர். ஆனால், அக்கர்த்தாக்களும் காணாத அடிமுடிகளை இறைவன் வள்ளல் பெருமானுக்கு காட்டுவித்தான். இவ்விதம் அடிமுடி கண்ட பெருமான்,*

பிரமன் விண்டு கண்டறியா முடிஅடி எனக்கே
விளங்குறக் காட்டிய விமலா என்றும்

அனம் உகைத்தான் அரிமுதலோர் துருவிநிற்க எனக்கே
  அடிமுடிகள் காட்டுவித்தே அடிமை கொண்ட பதியே என்றும் பாடி இறைவனைப் போற்றுகின்றார்.

*இவ்விதம் அடிமுடி காட்டிய இறைவன் அடிகளுக்கு தன் நிலையைக் காட்டினான், சித்தர்களது நிலையைக் காட்டினான், சகசநிலையை காட்டினான், சாகாதநிலையை காட்டினான், மனம் போய்க் கரைந்த இடத்தைக் காட்டினான். இங்ஙனம் அருள்நிலைகள் பலவற்றையும் காட்டி அருள் செய்யப்பெற்றதால் நம் பெருமானார்,*

அந்தோ ஈதுஅதிசயம் ஈதுஅதிசயம் என்புகல்வேன்
  அறிவறியாச் சிறியேனை அறிவறியச் செய்தே
இந்தோங்கு சடைமணி நின்அடிமுடியும் காட்டி
  இதுகாட்டி அதுகாட்டி என்றிலையும் காட்டிச்
சந்தோட சித்தர்கள்தம் தனிச்சூதும் காட்டிச்
  சாகாத நிலைகாட்டிச் சகசநிலை காட்டி
வந்தோடு நிகர்மனம்போய்க் கரைந்த இடம் காட்டி
  மகிழ்வித்தாய் நின்அருளின் வண்மை எவர்க்குளதே

*எனப் பாடி மகிழ்கின்றார். மனம் போய்க் கரைந்த இடம் என்பது மாபெரும் தத்துவநிலை. அந்நிலையில் நின்றாரே அடிமுடி காண்பர்.*

*திருமூலர் அருளிய திருமந்திரத்தில் எட்டாம் தந்திரத்தில் பதினேழாம் அதிகாரமாக விளங்குவது அடித்தலையறியும் திறங்கூறல். இஃது உடம்பினுள்ளே விளங்கும் அடிமுடிகளை கூறும்.*

காலும் தலையும் அறியார் கலதிகள்
காலந்தச் சத்தி அருள்என்பர் காரணம்
பாலொன்று ஞானமே பண்பார் தலையுயிர்
காலந்த ஞானத்தைக் காட்ட வீடாகுமே.

தலயடி ஆவதறியார் காயத்தில்
தலையடி உச்சியில் உள்ளது மூலம்
தலையடியான அறிவை அறிந்தோர்
தலையடியாகவே தானிந்தாரே

*தலைகால் தெரியாமல் தருக்கித் திரிகிறான் என்பது உலகியல் பொருள். அடிமுடி தெரியாது திகைப்பதென்பது அருளியற் பொருள். தலைகால் தெரியாது வள்ளல் பெருமானும் பலகால் திகைத்தார். 'தலைகால் இங்கறியாதே திரிந்த சிறியேனை' எனத் தம்மைத்தாமே கூறுவர்.*

*இவ்விதம் சிவத்திற்கு அடி எதுவோ, முடி எதுவோ எனப் பலகால் வருந்தி இருந்த தமக்குச் சிவத்தின் அடிமுடிகள் உனக்குள்ளே விளங்குகின்றன என்று ஆளுடைய பிள்ளையார் உணர்த்தியருளியதாகக் கூறுவர்.*

அடியெனல் எதுவோ முடியெனல் எதுவோ
  அருட்சிவம் அதற்கெனப் பலகால்
படியுற வருந்தி இருந்தஎன் வருத்தம்
  பார்த்து அருளால் எழுந்தருளி
மிடியற எனைத்தான் கடைக்கணித்து உனக்குள்
  விளங்குவ அடிமுடி என்றாய்
வடிவிலாக் கருணை வாரியே மூன்று
  வயதினில் அருள்பெற்ற மணியே.

*இவ்விதம் அடியெது முடியெது என அருளால் உணர்ந்து கொண்ட பெருமானாருக்கு அவ்வருளே அடிமுடி சூட்டியும் அருளிச்செய்தது. அப்பாங்கினையே இனி காணவிருக்கிறோம்.*

*வன்தொண்டப் பெருமானுக்கு (சுந்தரருக்கு) வலிந்து இறைவன் அருளிய திருவடி தீக்கையை நீள நினைந்து வள்ளல் பெருமான் இருண்டு அருமையான பாடல்களைப் பாடியுள்ளார். ஒன்று இறைவனை நோக்கியே பாடியது. இன்னொன்று வன்தொண்டப் பெருந்தகையைப் பார்த்துப் பாடியது.*

*"எம் இறைவனே! பிரமனும் திருமாலும் வேதங்களும் தம்தம் முடிகளின் மீது உன் திருவடியை வைத்தருள வேண்டும் என வேண்டியும் அவற்றின் முடிகளின் மீது வாராது, உன்னைப் பித்தன் என்று இகழ்ந்துரைத்த சுந்தரரின் முடியின் மீது வந்ததே! சுந்தரரின் திருமுடியின் மீது உன் திருவடிகளுக்கு என்ன ஆசை?" எனப் பொருள்படும் வகையில் நம் வள்ளல் பெருமனார் பின்வரும் அருட்பாவில் அருளியுள்ளார்.*

ஒருமுடிமேல் பிறை வைத்தாய் அரிஅயன் ஒண்மறைதம்
பெருமுடிமேல் உறவேண்ட வராது உனைப் பித்தனென்ற
மருமுடி ஊரன் முடிமேல் மறுப்பவும் வந்தவர்
திருமுடி மேலென்ன ஆசைகண்டாய் நின் திருவடிக்கே.

*இறைவனை நோக்கி இவ்வாறு பாடிய நம் வள்ளல் பெருமான் சுந்தரரை நோக்கி வன்தொண்டப் பெருந்தகையே! வேதம் முதலிய கலைகளெல்லாம் விரைந்து விரைந்து அனந்தம் முறை ஓதவும் அவையெல்லாம் அணுவளவுகூட உணர்வதற்கு அரிதாகிய*

*எம்பெருமானின் பாதமலர், உன்னுடைய திருமுடிமேல் படுவதற்கு நீ செய்த பெருந்தவம்தான் யாது? அதனைச் சொல்லமாட்டாயா? என்று கேட்கிறார்.*

வேதமுதற் கலைகளெலாம் விரைந்து விரைந்து அனந்தமுறை
ஓதஅவைக்கு அனுத்துணையு; உணர்வரிதாம் எம்பெருமான்
பாதமலர் நினதுதிருப் பணிமுடிமேல் படப்புரிந்த
மாதவம் யாது உரைத்தருள்வாய் வன்றொண்டப் பெருந்தகையே

*இவ்வாறு திருவடி தீக்கையை இறைவன் சுந்தரருக்கு வலிந்தருளிய திறத்தைப் போற்றி புகழ்ந்து பாடும் வள்ளல் பெருமானுக்கும் வன்தொண்டப் பெருந்தகைக்கு நிகழ்ந்தது போன்றே நிகழ்ந்தது. இதனை வள்ளல் பெருமானாரே திருவருட்பா பாடலொன்றில் கூறியுள்ளார்.*

*திருவதிகையில் சித்தவடமடத்தில் சுந்தரருக்கு எவ்வாறு இறைவன் திருவடி தீக்கை செய்தருளினானோ அவ்வாறே வள்ளல் பெருமானுக்கும் திருவடி தீக்கை செய்தருளினான். ஒருநாள் அடியவர் வேடத்தில் இறைவன் வள்ளல் பெருமானிடம் வந்தான். பெருமானுடன் தங்கினான். இரவு துயிலும்போது வள்ளல் பெருமானின் முடியில் தன் இரு அடிகளும் பொருந்துமாறு வைத்துப் படுத்தான். தம்தலைமீது கால்கள் படுவதை உணர்ந்த வள்ளல் பெருமான் அக்கால்களை அப்பால் தள்ளினார். உடனே இறைவன் தனது உண்மைக் கோலத்தைக் காட்டி உன்னை நேரில் காணவந்த எனக்கு இவ்வளவு சுதந்திரம்கூட இல்லையோ என்று அருளி ஆட்கொண்டான்.*

*இவ்வற்புத நிகழ்ச்சியை வள்ளல் பெருமான் திருவருட்பா அருள்விளக்கமாலைப் பாடலொன்றில் நாடகப் பாங்கில் பாடி அருளியுள்ளார்.*

நீ நினைத்த நன்மைஎலாம் யாம் அறிந்தோம் நினையே
நேர்காண வந்தனம் என்று என்முடிமேல் மலர்க்கால்
தான்நிலைக்க வைத்தருளிப் படுத்திடநான் செருக்கி
தாள்களெடுத்து அப்புறத்தே வைத்திடத் தான் நகைத்தே
ஏன்நினைத்தாய் இவ்வளவு சுதந்தரம் என்மகனே
எனக்கிலையோ என்றருளி எனையாண்ட குருவே
தேன்நிலைத்த தீம்பாகே சர்க்கரையே கனியே
தெய்வநடத்தரசே என் சிறுமொழி ஏற்றருளே.

சுந்தரர் திருவடிதீக்கை பெற்ற நிகழ்ச்சியும் வள்ளல் பெருமானார் திருவடி தீக்கை பெற்ற நிகழ்ச்சியும் மிகவும் ஒத்தாற்போல் நிகழ்ந்துள்ளது எண்ணி வியக்கத்தக்கது. பெருமானுக்கு இறைவன் திருவடி தீக்கை செய்தருளியதைக் குறிக்கும் பாடல்கள் திருவருட்பாவில் இருபத்தைந்துக்கும் மேற்பட்டவை உள.

மற்றுமோர் திருவருட்பாவில் இறைவனது திருநடச் செய்கையை எவ்வளவு அழகாக பாடுகின்றார் என்பதைக் காண்போம்.

நடராசப் பெருமான் எதற்காகக் காலைத் தூக்கினான்? ஆடுவதற்காக எடுத்தான் என்று நீங்களெல்லாம் சொல்வீர்கள். இல்லையில்லை. என்தலை மேல் சூடுவதற்காகவே எடுத்தான் என்று நான் சொல்கிறேன். இந்த வழக்கை நாடே அறிய யாரிடம் சென்று தீர்த்துக் கொள்வோம் என்று கூறும் அளவிற்கு அவ்வளவு உறுதியோடு நம் பெருமானார் சொல்கின்றார்.

ஆடஎடுத்தான் என்று அறைகின்றீர் என்தலைமேல்
சூடஎடுத்தான் என்று சொல்கின்றேன் நாடறிய
இவ்வழக்கை யார்பால் இசைத்தறுத்துக் கொள்கிற்பாம்
கவ்வைஅற்ற அம்பலத்தான் கால்.

இவற்றையெல்லாம் நம் பெருமானார் ஏன் உரைத்தார். அவர் அடைந்த அந்த பேரின்ப சுகத்தை மனித தேகம் பெற்ற நாம் எல்லோரும் அடையும் பொருட்டே எடுத்துரைத்தார். இதை நன்குணர்ந்து வள்ளல் வழிநின்று அவனருளாளே அவன்தாள் வணங்கி மலஇருள் நீங்கி நற்கதியடைவோமாக.

..திருச்சிற்றம்பலம்..

## அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

அன்பு உள்ளங்களே! கடந்த 10 ஆண்டுகளாக அன்பர்களின் தயவால்தான் நமது மாத இதழ் நடைபெற்று வருகின்றது. ஆனால் பெரும்பாலான அன்பர்கள் நமது மாத இதழுக்கு சந்தா செலுத்தாமலேயே உள்ளனர்.

இருப்பினும் இதுவொரு ஆன்மீக மாத இதழ் என்ற காரணத்தினால் அவர்களுக்கும் தவறாது அனுப்பிக்கொண்டுதான் இருக்கிறோம். இதை உணர்ந்து அன்பர்கள் நிலுவையிலுள்ள தங்கள் தொகையை தெரிந்துகொண்டு சந்தா தொகையினை செலுத்தி இம்மாத இதழ் தொடர்ந்து நடைபெற உதவுமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

சந்தாகால விபரம் பற்றி அறிய புத்தகத்தின் பின் அட்டையில் தங்கள் முகவரியின் கடைசி வரியினை காண்க.

**மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் 8012680865**

**சித்தர் திருமூலர் அருளிய**

# திருமந்திரம்

தன்னை அறியாது தாம்நலர் என்னாது இங்கு
இன்மை அறியாது இளையரென்று ஓராது
வன்மையில் வந்திடும் கூற்றம் வருமுன்னம்
தன்மையின் நல்ல தவஞ்செய்யும் நீரே. – **அறஞ்செய்வான் திறம்**

*எமன் மிகப் பொல்லாதவன். திடீரென்று ஒருநாள் நம்முன் வந்து நிற்பான். அப்படி வரும் அவன் நாம் நல்லவனாயிற்றே என்று எண்ணமாட்டான் . நம்மைத் தவிற நம் சுற்றத்தார்க்கு வேறு ஆதரவு இல்லை என்பதையும் பார்க்கமாட்டான். இளம் வயதுடையவனாய் இருக்கிறாயே என்றும் பார்க்கமாட்டான். அத்துனை கொடுமை உள்ளவன் எமன். எனவே, அந்தக் கொடிய கூற்றுவன் வருவதற்கு முன்பே நல்லறங்களை செய்தல் வேண்டும். ஏனென்றால் மரணம் யாருக்கு, எப்போது, எப்படி, எங்கு வரும் என்பது யாருக்கும் தெரியாது. எனவே வாழும்போதே புண்ணிய வாழ்வோடு பொருந்தி வாழ்க.*

---

என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி அகங்குழை வார்க்கன்றி
என்பொன் மணியினை எய்தவொண் ணாதே. – **அன்புடைமை**

*நெருப்பினை மூட்டி, அதில் நம் எலும்புகளையே விறகாக இட்டு எரித்து கடுந்தவம் செய்தாலும் இறையை உணர்முடியாது. மாறாக, இறைவனிடம் உண்மை அன்போடு அகம் குழைந்து பத்தி செய்வோர் மட்டுமே இறைவன் அருளைப் பெறமுடியும். தங்கத்தின் உருகிய நிலையில்தான் கல்லினைப் பதிக்க முடியும். அதுபோல் உள்ளம் உருகினால்தான் இறையருள் பதியும்.*

---

குசவன் திரிகையில் ஏற்றிய மண்ணும்
குசவன் மனத்து உற்றது எல்லாம் அமையும்
குசவனைப் போல் எங்கள் கோன் நந்தி வேண்டில்
அசையில் உலகம் அது இது ஆமே.

*குயவன் சக்கரத்தில் ஏற்றும் மண்ணை தான் எண்ணியபடி விதவிதமான வடிவங்களில் பாண்டங்களாக செய்வதுதான் வழக்கம். இப்படி விதவிதமான பாத்திரங்களைச் செய்தாலும் சக்கரத்தின் இயக்கம் எப்பொழுதும் ஒரே மாதிரியாகவே இருக்கும். அதுபோல, ஒப்பற்ற ஈடு இணையிலா நம் இறைவன் தான் நினைத்தபடி விதவிதமான உயிர்களைப் படைத்தாலும் அவர் உயிர்களிடத்தில் கொண்டுள்ள அன்பு என்றும் மாறாது.*

# ஒன்றும் இரண்டும்

அருட்பெருஞ்ஜோதி அகவல் உரை

**ஒன்றது இரண்டது ஒன்றின் இரண்டது**
**ஒன்றினுள் ஒன்றது ஒன்றெனும் ஒன்றே**

| | | |
|---|---|---|
| ஒன்று அது | - | கடவுளாகிய அது ஒன்று |
| இரண்டு அது | - | அதுவே அருளோடு சேர்ந்து இரண்டு |
| ஒன்றின் இரண்டு அது | - | ஒன்றில் இரண்டாக இருப்பது அது |
| ஒன்றினுள் ஒன்று அது | - | ஒன்றுக்குள் ஒன்றாக இருப்பது அது |
| ஒன்றெனும் ஒன்றே | - | இவ்வாறு ஒன்றும் இரண்டுமாக இருந்தாலும் அது ஒன்றேதான். |

**ஒன்றல இரண்டல ஒன்றின் இரண்டல**
**ஒன்றினுள் ஒன்றல ஒன்றெனும் ஒன்றே**

| | | |
|---|---|---|
| ஒன்று அல | - | ஒன்று அல்ல (ஒன்றல்ல) |
| இரண்டு அல | - | இரண்டு அல்ல (இரண்டல்ல) |
| ஒன்றின் இரண்டு அல | - | ஒன்றில் இரண்டு அல்ல |
| ஒன்றினுள் ஒன்று அல | - | ஒன்றுக்குள் ஒன்றல்ல |
| ஒன்றெனும் ஒன்றே | - | ஒன்றென்னும் ஒன்றே |

**ஒன்றினுள் ஒன்றுள ஒன்றினில் ஒன்றில**
**ஒன்றற ஒன்றிய ஒன்றெனும் ஒன்றே**

| | | |
|---|---|---|
| ஒன்றினுள் ஒன்று உள | - | ஒன்றினுள் ஒன்றாக உள்ளது |
| ஒன்றினுள் ஒன்று இல | - | ஒன்றினுள் ஒன்றாக இல்லாதது |
| ஒன்று அற ஒன்றிய | - | ஒன்றினுள் ஒன்று உள்ளது என்னும் படியும், இல்லை என்னும் படியும் ஒன்றற ஒன்றிய(ஒன்று அற ஒன்றிய) |
| ஒன்றெனும் ஒன்றே | - | ஒன்று என்னும்படியான ஒன்றே |

மேல் மூவிரு அடிகளில்

1. ஒன்று - இரண்டு - ஒன்றில் இரண்டு - ஒன்றினுள் ஒன்று
2. ஒன்று அல - இரண்டு அல - ஒன்றில் இரண்டு அல - ஒன்றினுள் ஒன்றுஅல
3. ஒன்றினுள் ஒன்று உள - ஒன்றினில் ஒன்று இல - ஒன்றற ஒன்றிய **ஒன்றெனும் ஒன்றே**

இதுகாறும் கூறிய அனைத்தினும் "ஒன்றெனும் ஒன்றே" என்பது தேற்றம். மூவிடங்களிலும் விளியாக வந்தது அது.

வள்ளற்பெருமான் வாக்காகிய பின்வரும் திருவருட்பா பாடற்பகுதிகள் இவ்விடத்து ஒப்பு நோக்குதற்குரியவை.

**ஒன்றும்அலார் இரண்டும்அலார் ஒன்றிரண்டும் ஆனார்**
உருவும்அலார் அருவும்அலார் உருஅருவும் ஆனார்
அன்றும்உளார் இன்றும்உளார் என்றும்உளார் தமக்கோர்
ஆதியிலார் அந்தமிலார் **அரும்பெரும்சோ தி**யினார்
என்றுகனல் மதிஅகத்தும் புறத்தும்விளங் கிடுவார்
யாவும்இலார் யாவும்உளார் யாவும்அலார் யாவும்
ஒன்றுறுதாம் ஆகிநின்றார் திருச்சிற்றம் பலத்தே
ஓங்குகின்ற தனிக்கடவுள் ஒருவர்உண்டே கண்டீர் 3282

எவ்விடத்தும் எவ்வுயிர்க்கும் இலங்கு**சிவம் ஒன்றே**
என்னாணை என்மகனே **இரண்டில்லை** ஆங்கே
செவ்விடத்தே **அருளொடுசேர்த் திரண்டெனக்கண் டறிநீ**
திகைப்படையேல் என்றெனக்குச் செப்பியசற் குருவே. 4175

கடவுள் (சிவம் - அருட்பெருஞ்ஜோதி) ஒன்றே. சிவத்தின் அருளை, ஆற்றலை, சத்தி என்கிறோம். அமைதி நிலையில் சிவம், ஆற்றல் நிலையில் சத்தி. சிவமும் அதன் அருளாகிய (ஆற்றலாகிய) சத்தியும், பிரிக்க முடியாதவை. சிவம் வேறு, சத்திவேறன்று. ஒன்றாகக் காணும்போது ஒன்று, இரண்டாகக் காணும்போது இரண்டு. இவ்வகையில் ஒன்றாகவும் இரண்டாகவும் இருப்பது "ஒன்றற ஒன்றி" இருக்கிறது.

"ஒன்றற ஒன்றிய ஒன்றெனும் ஒன்றே" என வள்ளற் பெருமான் கூறுவது இதைத்தான்.

"சிவம் ஒன்றே...இரண்டில்லை....அருளோடு சேர்த்து இரண்டு என நீ கண்டறி" என்று வள்ளற்பெருமானுக்கு அருளிய சற்குருவாம் தெய்வம் (அருட்பெருஞ்ஜோதி) இதைக் குறித்து நீ **"திகைப்படையேல்"** என்றும் கூறிற்று.

ஒன்று, இரண்டு, ஒன்றின் இரண்டு, ஒன்றினுள் ஒன்று இரண்டு என்பதற்கெல்லாம் இது நல்ல விளக்கம்.

மலரும் மணமும்போல, தேனும் சுவையும் போல ஒன்றாகவும் இரண்டாகவும் உள்ளது.

முதல் இரண்டடிகளும் அடுத்த இரண்டடிகளும் பொருளில் முரண்படுவது போலத் தோன்றும். ஒவ்வொன்றும் ஒரு கோணத்தில் காண்கிறது. முடிவு ஒன்றே. ஒன்றற ஒன்றிய ஒன்றெனும் ஒன்றே.

..திருச்சிற்றம்பலம்..

**அருட்சபை நடம்புரி அருட்பெருஞ்ஜோதி**
**தெருட்பெருஞ் சீர்சொல திகழ்வ சித்தியே**



# அற்றார் அழிபசி தீர்த்தல்

## வள்ளுவரும் வள்ளலாரும்...



அறத்தின் திருவுரு என்று நாம் வள்ளுவரையும் ஜீவகாருண்யத்தின் திருவுரு என்று வள்ளல் பெருமானாரையும் கூறலாம். வள்ளலார் என்றாலே ஜீவகாருண்யம். இந்த ஜீவகாருண்யத்தை இரண்டு பகுதியாகப் பிரித்து நம் பெருமானார் வற்புறுத்துகிறார். ஒன்று, அற்றார் அழிபசி தீர்த்தல். மற்றொன்று புலால் மறுத்தல்.

இவ்விரண்டிலுமே நம் பெருமானாருக்கு ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தவர் வள்ளுவப் பெருந்தகை. வள்ளுவர் கூறிய அற்றார் அழிபசி தீர்த்தலையும், புலால் மறுத்தலையும் செயற்படுத்தி தீவிரப்படுத்த வந்தவர்தான் வள்ளலார். இன்று அன்னதானம், சைவ உணவு இவ்விரண்டிற்கும் நம் வள்ளல் ஓர் அடையாளமாகவே ஆகிவிட்டார்.

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்

பெற்றான் பொருள் வைப்புழி என்பது ஈகை அதிகாரத்திலுள்ள குறள்.

வக்கற்றார், வகையற்றார், வழியற்றார், திக்கற்றார் என்று அற்றுப்போன தன்மையைக் குறிக்கும் எல்லாவற்றையும் சேர்த்து "அற்றார்" என்ற ஒரே சொல்லில் அடக்கிவிடுகிறார் நம் வள்ளுவப் பெருந்தகை.

பசியை அழிபசி என்கிறது குறள். பசியின் ஆற்றல் ஒரு நாட்டையே ஏன் உலகத்தையேகூட அழிக்கும் வல்லமை கொண்டது. ஆனால், பசி ஒன்று இருப்பதால்தான் உயிர்களெல்லாம் முயல்கின்றன. பசி இல்லாவிட்டால் எல்லா உயிர்களும் கல்லைப் போன்று இருப்பர். உயிர்களின் அசைவே, முயற்சியே பசிக்காகத்தான், அதைத் தணித்துக் கொள்ளத்தான். பசி என்பது ஆண்டவன் ஆன்மாக்களுக்கு அளித்த ஓர் உபகாரக் கருவி என்கிறார் வள்ளலார்.

பசி உயிரை அழிக்க வல்லது. அந்நிலையில் ஒருவருக்கு உணவு கொடுத்தால் அச்செயல் உயிரைக் கொடுத்ததாகவே கருதப்படும். "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்று புறநானூறும் அதனை முன்மொழிந்தாற்போல் அப்படியே எழுத்துப்பிசகாமல் மணிமேகலையும் கூறுகின்றது.

பணத்தை பெட்டியில் வைக்கிறோம். சாதாரணமானவர்களுக்கு மரப்பெட்டி, சற்று வசதியானவர்களுக்கு இரும்புப் பெட்டி. மிகவும் வசதி வந்துவிட்டால் வங்கி லாக்கர்.

அளவுக்குமீறி வசதி வந்தால் வெளிநாட்டு வங்கிகள் என நாம் தேடிய செல்வத்தை பாதுகாக்கிறோம். ஆனால், அதைவிடச் சிறந்த வழி ஏழை எளிய மக்களின் பசித்த வயிற்றாகிய பெட்டியில் போட்டு வைப்பதுதான். வங்கியில் போட்ட பணத்தை வாழ்நாள் வரையில் எடுக்கலாம். வாழ்நாள் முடியும் சமயம் காதறுந்த ஊசியைக்கூட நாம் எடுத்துச் செல்ல முடியாது. மாறாக, ஏழைகளின் பசித்த வயிற்றில் போட்ட பணம் நமது தலைமுறைக்கு மட்டுமல்லாமல் அது நமது அடுத்த பிறவியிலும் புண்ணியமாக வந்து பலன் கொடுக்கும். அத்தகைய அற்புத சக்தி வாய்ந்ததுதான் பசியாற்றுவித்தல். இந்த வயிற்றுப் பெட்டியைப் பற்றி நம் பெருமானார் கூறும் பாடல் ஒன்றிலிருந்து சில வரிகளைக் பின்வருமாறு காணலாம்.

பெட்டிமேல் பெட்டிவைத்து ஆள்கின்றீர் வயிற்றுப்
பெட்டியை நிரப்பிக்கொண்டு ஒட்டியுள் இருந்தீர்
பட்டினி கிடப்பாரை பார்க்கவும் நேரீர்
பழங்கஞ்சி ஆயினும் வழங்கவும் நினையீர்
எட்டிப்போல் வாழ்கின்றீர் கொட்டிபோல் கிளைத்தீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துலகீரே.

மேற்சொன்னதுபோல், பெட்டி, மரப்பெட்டி, இரும்புப் பெட்டி, உள்நாட்டு வங்கிப் பெட்டி, வெளிநாட்டு வங்கிப் பெட்டி என பெட்டிமேல் பெட்டி வைத்து ஆள்கின்றோம். இவை எல்லாம் வயிற்றுப் பெட்டியை நிரப்பிக் கொள்ளத்தானே. இப்படிச் சுயநலமிகளாக வாழ்ந்து பட்டினிக் கிடப்பாரை பாராது இருக்கிறோம். இத்தகையோர் ஒன்றுக்கும் உதவாத எட்டி மரத்தினைப் போன்றோர் என்று கூறுவது மட்டுமல்லாது அவர்களை பித்தர்கள் என்றும் சாடுகின்றார். ஏழைகளின் பசித்த வயிற்றில் பணத்தை போடவேண்டும் என்று வள்ளுவர் வள்ளலார் இவ்விருவருமே வற்புறுத்துகின்றனர். இங்கு திருவள்ளுவர் கூறும பொருள் வைப்பு உழியை வள்ளல் கூறும் வயிற்றுப் பெட்டியுடன் இணைத்துக் காணவேண்டும்.

ஒரு நாடு எப்படி இருக்கவேண்டும் என்பதை வள்ளுவர் கூறுகின்றார். இதற்கு நாடு என்றே ஓர் அதிகாரத்தில் முத்தான பத்துக் குறட்பாக்களை அருளியுள்ளார். அதில் ஒன்று பின்வருமாறு.

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு

பசியும், பிணியும் உட்பகை. செறுபகை என்பது வெளியே இருந்து வருவது.

பசி, பகை, நோய் இம்மூன்றுமே ஒரு நாட்டை அழித்துவிடும். எனவேதான் இம்மூன்றும் இல்லாத நாட்டைக் காண வள்ளுவரும் வள்ளலாரும் விழைகின்றனர். இவையெல்லாம் வள்ளுவரின் அருட்கொடை. உலகம் உள்ள அளவும் பயன் நல்கும். இதில் நம் வள்ளல் பெருமானார் எழுதியதோடும் பேசியதோடும் நிறுத்திவிடாமல் ஒரு தருமசாலையைக் கட்டி செயல்படுத்தியும் காட்டினார்.

நாட்டில் நல்குரவு (வறுமை) நீங்க வேண்டும் என்று வள்ளுவர் எண்ணுகிறார். இதற்கு நல்குரவு என்ற அதிகாரம் இயற்றுகின்றார். அது அவருக்குப் போதவில்லை. இரவச்சம் என்று இரண்டாவதாக ஓர் அதிகாரம் செய்கிறார். இரவு என்றால் யாசித்தல். இதுவும் போதாமல் உச்சபட்சமாக இவ்விதம் யாசிப்போரைப் படைத்த பிரமனைச் சபிக்கும் அளவிற்குச் செல்கின்றார்.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்.

| | | |
|---|---|---|
| இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் | - | உலகில் சிலர் இரந்துதான் பிச்சையெடுத்துதான் உயிர் வாழவேண்டும் என்றால் |
| உலகியற்றியான் | - | அப்படி உலகத்தைப் படைத்தவன் |
| பரந்து கெடுக | - | அப்பிச்சைக்காரரர்களைப் போலவே அலைந்து திரிந்து ஒழிக |

இவ்வள்ளுவரின் வாக்கினை அடியொற்றி பசி பட்டினியோடு போர் தொடுத்து அவற்றை அழித்தொழிக்க வந்தவர் வள்ளலார்.

திருவள்ளுவர் தம் திருக்குறளில் ஆங்காங்கே ஏழைகளின் பசிதவிர்க்கும் அறத்தை வற்புறுத்தினார். வள்ளலோ அதை ஓர் இயக்கமாகவே நடத்தினார்.

வடலூரில் 1867ஆம் ஆண்டு சத்திய தருமசாலையை அமைத்து அணையா அடுப்பினையும் ஏற்றிவைத்தார். அந்த அடுப்பு கடந்த நூற்று ஐம்பத்து மூன்று ஆண்டுகளாக பல்லாயிரக் கணக்கான ஏழை எளிய மக்களின் அழிபசியை தீர்த்துக் கொண்டிருக்கிறது என்பது சிறப்பு.



**பசி என்கிற நெருப்பானது ஏழைகள் வயிற்றில் பற்றி எரிகின்றபோது ஆகாரத்தால் அவிக்கின்றதுதான் ஜீவகாருண்யம். இதுவே கடவுள் வழிபாடு. - வள்ளலார்**

..திருச்சிற்றம்பலம்..

# தருமம் செய்ய விரும்பும் நெஞ்சங்களுக்கு ஒரு அன்பு வேண்டுகோள்

அன்பர்கள் தங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமண நாள், பிறந்த நாள் போன்ற தினங்களிலும், இறந்தவர்களின் நினைவு நாள் போன்ற நாட்களிலும் திருவண்ணாமலையில் அமைந்துள்ள நமது வள்ளலார் சத்திய தருமச்சாலையில் அன்னதானம் செய்யலாம். **தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின்கீழ் வருமானவரி விலக்கு உண்டு.**

## ஒரு நாளுக்கான அன்னதான நன்கொடை

| | |
|---|---|
| காலை அரசு மருத்துவமனையில் கஞ்சி வார்த்தல் | -ரூ.2,000/- |
| மதிய சிறப்பு அன்னதானதிற்கு | -ரூ.8,500/- |
| மதிய அன்னதானதிற்கு | -ரூ.5,000/- |
| இரவு சிறப்பு அன்னதானதிற்கு | -ரூ.8,500/- |
| பௌர்ணமி சிறப்பு அன்னதானதிற்கு | -ரூ.15,000/- |
| பசு பராமரிப்பிற்கு (22 பசுக்கள்/ஒரு நாளைக்கு) | -ரூ.2,500/- |
| அணையா தீபத்திற்கு Oil (5 இடங்களுக்கு) -15லி | -ரூ.1,900/- |

**தங்களது அன்னதான நாட்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்**

**Please donate - Cheque / DD In favour of**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**Please donate through: HDFC Bank Ltd.,**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**A/c No. : 08761450000048 IFSC Code: HDFC0000876**

**Please send MO to:**

அருள்திரு **பாபு சாது**

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**

552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை,

கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை அஞ்சல்,

திருஅண்ணாமலை - 606 604.

செல்: +91 9443489849, +91 9942776351

அன்னதானம் பற்றிய விபரங்களுச்கு:-

**+91 9487454688**

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# ஆன்மீக சத்சங்க விழா

## பொள்ளாச்சி அர்த்தநாரிப்பாளையத்தில்




ஐயநின் சீர்பேசு செல்வர்நாய் நல்ல
தெள்ளமுதுண்டு உவந்த திருநாய்...
நின் புகழ் கேட்ட வித்தகர் திருச்செவி
விழாச்சுபம் கேட்கும் செவி...

– திருவருட்பா

நிகழும் விகாரி வருடம் ஆடித் திங்கள் 12ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (28.07.2019) அன்று

- **திருவருட்பா அகவல் பாராயணம்** - சன்மார்க்க அன்பர்கள்
- **சிறப்பு சத்சங்கம்** - சன்மார்க்க சாதுக்கள்
- **பக்தி** **தியானம்** **ஜோதி வழிபாடு**

போன்ற தெய்வீக நிகழ்வுகள் நடைபெறவுள்ளது



ஜூலை
28
2019
ஞாயிறு

**இடம்:** அருட்பெருஞ்ஜோதி ஆலயம்,
சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்,
பெருமாள் மலை அடிவாரம்,
அர்த்தநாரிபாளையம்,
பொள்ளாச்சி.

**தொடர்புக்கு:** +91 8838540176,
+91 7502026565, +91 8940396760

அன்பர்கள் அனைவரும் இந்த ஞான வைபவத்தில் தங்கள் குடும்பத்தினருடன் கலந்துகொண்டு "கேள்வி விருந்தருந்தி" என்ற வள்ளற் பெருமானாரின் வாக்கிற்கிணங்க நாம் அனைவரும் இந்த அரிய ஆன்மீக தகவல்களை செவியுற்று, வாழ்க்கையில் கடைபிடித்து எல்லா மேன்மைகளையும் அடைய அன்புடன் அழைக்கிறோம்.

> அன்பர்கள் கவனத்திற்கு!
>
> அகவல் பாராயணத்தில் கலந்துகொள்ளும் அன்பர்கள் முதல் நாள் இரவே (சனிக்கிழமை) வந்து தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

**பஸ் ரூட்:** பொள்ளாச்சியிலிருந்து பஸ் எண்: 16, 27, 58 (கடைசி பஸ் இரவு 9:30க்கு)
உடுமலையிலிருந்து பஸ் எண்: 28, 34 (கடைசி பஸ் இரவு 8:30க்கு)

**குருவருளும் திருவருளும் பெற அனைவரும் வாரீர்! வாரீர்!!**

Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly July 2019, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/74857/05
PR No.TRL/11/2017-19 Posted at Tiruvannamalai on 16th of every month,
WPP License No. TN/PMG(CCR)/WPP 582/2018-2019
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை



அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி



# வடலூர் மாதப்பூசம்

**04.07.2019** – ஆனி 18 – வியாழன்

**31.07.2019** – ஆடி 15 – புதன்

**28.08.2019** – ஆவணி 11 – புதன்

**24.09.2019** – புரட்டாசி 07 – செவ்வாய்க்கிழமை

**05.10.2019** – புரட்டாசி 18 – சனிக்கிழமை
அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் திருவருட்பிரகாச வள்ளல் பெருமானாரை இப்புவியில் வருவிக்கவுற்ற திருநாள்

**21.10.2019** – ஐப்பசி 04 – திங்கட்கிழமை

**24.10.2019** – ஐப்பசி 07 – வியாழக்கிழமை
வள்ளல் பெருமானார் சன்மார்க்கக் கொடி கட்டிய திருநாள்

தொடர்புக்கு: **88385 40176, 63801 11475**

*அனைவரும் வருக! குருவருள் பெறுக!!*

திரு/திருமதி

Redirect to : அருள்திரு **பாபு சாது**

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**

552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருஅண்ணாமலை - 606 604. Cell : 94434 89849, 99427 76351

சந்தா பற்றிய விபரங்களுக்கு அணுகவும்: **+91 80126 80865**